மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலிலிருந்தே அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்று அறியலாம். 1947-லிருந்து 1967-வரையில் 20 ஆண்டு காலம் இதில் திட்டங்கள் முடிக்க வேண்டும் என்றும், மேலும் 5 ஆண்டுகள் தேவை என்றும் 1972 வரைக்கும் அனுமதி கேட்டு அளிக்கப்பட்டிருக்கிறது. மாற்றங்கள், திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டு, நிலங்கள் ஆர்ஜிதம் செய்து கட்டடங்கள் பெறவேண்டும். அப்படிப் பெறுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். சாலைகளுக்கு, வீடு இருப் பவர்கள் நிலங்கள் வழங்கவேண்டும் என்ற முயற்சியில் நகராட்சியே பணம் கொடுப்பது என்றால் ஏராளமான செலவு ஆகிறது. ஆகவே, அந்த முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. முயற்சியில் சிறிது காலதாழ்வு ஏற்பட்டிருக்கிறது. அதை விரைவுபடுத்த முயற்சி வலியுறுத்தப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அந்த நடவடிக்கை விரைவுபடுத்தப்படுகிறது என்றார்கள். 1967-ம் ஆண்டு நானே விண்ணப்பம் கொடுத்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே, அதை வலியுறுத்தி, துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலிலே நான் சொன்னபடி, மீண்டும் 5 ஆண்டுகள் கொடுத்திருக்கிறார்கள். மாற்றங்கள், திருத்தங்கள் பற்றிய நடவடிக்கை மேற்கொள்ளும்போது, நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு, வலியுறுத்தப்பட்டு வருகிறது.

கோடைக்கானலில் குளிர்ப்பதன நிலையம்.

*577 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதைகள், அறுவடை செய்யப்பட்ட கிழங்குகள் ஆகியவற்றைச் சேமித்து வைப்பதற்கென கோடைக்கானலில் குளிர்ப்பதன நிலையம் ஒன்று அமைக்க முடிவு செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) உருளைக் கிழங்கு விதைகள், காய்கறிகள் முதலியவற்றைச் சேமித்துவைப்பதற்கென்று குளிர்ப்பதனக் கிடங்கு ஒன்றை நிறுவ, இந்திய அரசு முன்னரே ஒப்பளிப்பு வழங்கியிருந்த கடன் ஒன்றை மறுபடி செல்லுபடியாக்கித் தருமாறு இவ்வரசு மத்திய அரசை அணுகியது. இக்கடனை மறுபடி செல்லுபடியாக்கித்தர இந்திய அரசு இசைந்தால் குளிர்ப்பதனக்கிடங்கை நிறுவும் இடம் குறித்து முடிவு செய்யப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்திய அரசு இசைவு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், இந்தமாதிரியான குளிர்ப்பதன நிலையங்கள் அமைக்க, மாவட்டங்களின் தலைநகரங்களில் அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? சென்னையில் பழ வியாபாரிகளுக்கு இப்படிக் கட்டிக் கொடுத்திருப்பதன் காரணமாக, அவர்களுக்கு வசதியாக இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது இந்திய அரசாங்கத்தின் திட்டமாகும். கூட்டுறவு விற்பனைக் குழுக்கள் மூலம் குளிர்ப்பதன சாதனத்தை உண்டாக்கவேண்டும் என்று ஏற்கெனவே திட்டத்தைக் கொடுத்திருந்தார்கள். பரிசீலனை செய்து திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அதை கூட்டுறவு சங்கத்திற்குத் தருவதாக இருந்தால், மானியம், கடன் கொடுக்க வேண்டும். முன் தொகை மானியமாகக் கேட்பதாக இருந்தால், மீண்டும் மத்திய சர்க்காருக்கு எழுதி, அவர்கள் ஒப்புதல் தரவேண்டும் என்று மத்திய சர்க்காரை

1970 மார்ச் 28]

கேட்டதற்கு, முடியாது என்று அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி கூட்டுறவு சங்கத்தின் மூலமாகச் செய்யவேண்டும் என்று சொன்னால், விவசாய இலாகாவின் மூலமாக, அந்த இலாகாவிற்கு கடன், கட்டடங்கள் கொடுத்து செய்யும்போது, ஒப்பளிப்பு ஒன்றுமே அவசியம் இல்லை என்று மத்திய சர்க்காருக்குத் தெரிவித்து, மீண்டும் வலியுறுத்தி உதவி தரவேண்டும் என்று இப்பொழுது கடிதப் போக்குவரத்து நடக்கிறது.

திரு. ஜெ. கருணைநாதன் : தலைவர் அவர்களே, உருளைக்கிழங்கு அழுகும் பொருள். ஆகவே, குளிர்ப்பதன சாதனம் அவசியமாகிறது. ஆகவே, மத்திய சர்க்காரை வலியுறுத்தும்போது, நீலகிரி மாவட்டத்திற்கு அதை விஸ்தரிக்க முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முதலிலே கொடைக்கானலில் நிறைவேற்றுவோம். அதன் பிறகு நீலகிரிக்கு வருவோம்.

THIRU B. VENKATASWAMY : Simla variety of potato is best suited for seed purposes for Hosur taluk. Now we are importing varieties like 'President, Kuprikuber and Chandramukhi' at high cost. Will the Government think of installing a cold storage plant to store seeds locally purchased and if so, when the work on the same will be started?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய சர்க்கார் கொடைக்கானலில் ஏற்படுத்தியிருந்த அந்த குளிர்ப்பதன சாதனத்தைப் பற்றியது கேள்வி. மாநில அரசாங்கம் பல இடங்களில் குளிர்ப்பதன சாதனங்கள் வைக்க திட்டம் இருக்கிறது. அந்த வகையில்தான் ஹோசூரில் வைக்கக் கவனிக்கப்படும்.

Aerial spraying of pesticides

* 578 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government's programme of aerial spraying of pesticides has been stopped in Thanjavur District for the present; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை. 1969–70-ம் ஆண்டில் விமான மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, விமான மூலம் மருந்து தெளிக்கும்போது, குறிப்பாக கர்ப்பஸ்த்ரீகளுக்கு பாதகம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறதே. பாதகம் உண்டாகிறதா ? அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட பாதகம் இல்லை என்று முற்றிலும் உணர்ந்த பிறகுதான், தெளிப்பான்களுக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. சந்தேகப்படவேண்டிய அவசியம் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : விமான மூலம் மருந்து தெளிக்க செலவு என்ன ஆகிறது? விவசாயிகளிடம் ஒரு ஏக்கருக்கு எந்த அளவில் வசூலிக்கப் படுகிறது?